# விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி தொடர்பான கோட்பாடுகளும்அதன் நடைமுறைப் பொருத்தப்பாடும்

பரமதயாளன் மதுசன்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**

அனைவருக்கும் கல்வி என்ற எண்ணக்கருவோடு இணைந்த வகையில் விசேட கல்வி, விசேட தேவைசார் கல்வி, உள்ளடங்கல் கல்வி ஆகிய எண்ணக்கருக்களும் விருத்தி கண்டுள்ளன. இவ்வாய்வானது மட்டக்களப்புமாவட்டத்தை மையமாகக் கொண்டமைந்துள்ளதோடு விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கோட்பாடுகளையும் பாடசாலை மட்டத்தில் அதன் நடைமுறை பொருத்தப்பாட்டினையும் அறிந்து கொள்வதனையும் நோக்கமாகக் கொண்டு அளவை நிலை ஆய்வாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்குடா கல்வி வலயத்தில்விசேட கல்வி அலகுகளைக் கொண்ட ஐந்து பாடசாலைகள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இப்பாடசாலைகளிலிருந்து அனைத்து அதிபர்களும் உப அதிபர்களும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களும், விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களும், விசேட கல்விக்கான ஆலோசகரும் நோக்க மாதிரியின் அடிப்படையில் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இவர்களிடமிருந்து வினாக்கொத்து,நேர்காணல்,அவதானம் முதலான ஆய்வுக் கருவிகளினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு நோக்கங்களின் அடிப்படையில் கலப்பு ஆய்வு அணுகுமுறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வின் முடிவுகளாக விசேட கல்வி அலகுகளுக்கான வள ஒதுக்கீடு இன்மை, விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பொருத்தமான கற்றல் சூழல் இன்மை, விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பொருத்தமான தளபாட வசதியின்மை, அணுகல் வசதிகள் பொருத்தமின்மை, விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கோட்பாடுகள் வெறுமனே கோட்பாடுகளாகவே அமைந்துள்ளமை, சமூக ஆதரவு குறைவாக உள்ளமை முதலானவை இனங்காணப்பட்டதுடன், இதற்கான பரிந்துரைகளாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அந்நிறுவனங்களுடன் சுமூகமான தொடர்பினை பேணுதல்,க.பொ.த உயர்தர மாணவர்களின் செயற்றிட்டங்களை விசேட கல்வி மாணவர்களுக்கான வசதிகளாக பயன்படுத்திக் கொள்ளல், விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளின் பிரயோகம் தொடர்பில் முறையாக அறிக்கைகளை பேணச் செய்தல், தொடர்ச்சியான மேற்பார்வைக்குட்படுத்துதல், விசேட கல்வி தொடர்பில் சமூகத்திடையே விழிப்புணர்வினை மேற்கொள்ளுதல் முதலானவைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** விசேட கல்வி, உள்ளடங்கல் கல்வி, சுற்றுநிருபங்கள், அணுகல் வசதி

## 1. ஆய்வு அறிமுகம்

விசேட தேவைசார் கல்வி என்பது சாதாரண பிள்ளைகளுடன் ஒப்பிடுகையில் உடல், உள மற்றும் மனவெழுச்சி ரீதயில் இயலாமை கொண்டோருக்கும் மீத்திறன் கொண்ட பிள்ளைகளுக்கும் வழங்கும் கல்வியே விசேட தேவைசார் கல்வியாகும். இப்பிள்ளைகளுக்கு சாதாரண பிள்ளைகளை விட கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும். விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான அணுகல் வசதிகளை வழங்குவது அத்தியவாசியமானதாகும். அணுகல் வசதிகள் இல்லாதது மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு இடையூறாக இருப்பதனால் அணுகல் வசதிகளை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் (கல்வி அமைச்சு சுற்றறிக்கை 33/2022).

விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் சாதாரண மாணவர்களுடன் ஒப்பிடுகையில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இப்பிரச்சினைகளைத் தீர்த்து இம்மாணவர்களுக்கும் கல்வியில் சமவாய்ப்பினையும் சமசந்தர்ப்பங்களையும் ஏற்படுத்த வினைதிறனான நடைமுறைகள் செயலுருப்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும் இந்நடைமுறைகளின் பொருத்தப்பாட்டினையும் நடைமுறை பிரயோகத்தினையும் கண்டறியும் பொருட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.இதன்படி இவ்வாய்வானது ஆய்வின் வரையறை கருதி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்குடா கல்வி வலயத்தில் உள்ள விசேட கல்வி அலகுகளைக் கொண்ட ஐந்து பாடசாலைகளை மையப்படுத்தியதாக இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2026, IRJTSR

## 1.2 ஆய்வுப் பிரச்சினை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு ஆகிய கல்வி வலயங்களுடன் ஒப்பிடுகையில் கல்குடா கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர்.

**அட்டவணை 1.1 : மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விசேட கல்வி அலகுகளில் கல்வி பயிலும் மாணவர்களின் விபரம்.**

| கல்வி வலயங்கள் | விசேட கல்வி அலகுகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை | விசேட கல்வி அலகுகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மட்டக்களப்பு | 06 | 32 |
| மட்டக்களப்பு மேற்கு | 05 | 26 |
| மட்டக்களப்பு மத்தி | 04 | 16 |
| பட்டிருப்பு | 05 | 29 |
| கல்குடா | 06 | 35 |

(மூலம்: வலயக்கல்வி வருடார்ந்த அறிக்கைத் தொகுப்பு - 2025)

விதுக்ஷனா (2025) என்பவர் அம்பாறை மாவட்டத்தில்‘‘விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்கள்’’எனும் ஆய்வில்85% ஆன அதிபர்கள் விசேட கல்வி அலகுகளை உள்வாங்கிய வகையில் வள ஒதுக்கீடுகளையோ, மேற்பார்வைகளையோ மேற்கொள்வதில்லை எனவும் 100 சதவீதமான அதிபர்கள் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களுடனான கூட்டங்களில் பங்கு கொள்வதில்லை எனவும் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் வள ஒதுக்கீடு இன்மை என்பனவற்றையும்தனது ஆய்விற்கான முடிவுகளாக வெளியிட்டுள்ளார். இவ் ஆய்வு முடிவானது ஆய்வுப் பிரதேசத்திலுள்ள ஆய்வுப்பிரச்சினையுடன் தொடர்புடைய வகையில் அமைவதால் இவ்வாய்வுப் பிரச்சினை ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்குடா கல்வி வலய பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளை உள்ளடக்கிய பாடசாலைகளில் உள்ளடங்கல் கல்வி என்ற அடிப்படையில் வகுப்பறைகளில் எல்லா மாணவர்களுடனும் இணைத்து கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் உள்ளடக்கப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லாத நிலையை அவதானிக்கலாம். இதற்கு மிகமுக்கிய காரணம் பாடசாலை சமூக தொடர்பு குறைவு, போதுமான வள ஒதுக்கீடு இன்மையும், விசேட கல்வி தொடர்பான போதுமான அறிவின்மையுமே ஆகும். இவை அனைத்தும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வியை முழுமையடையச் செய்வதில் தடைகளாக அமைகின்றன.இத்தகைய பாடசாலைசார் காரணிகளை அறிவதற்காக கல்குடா கல்வி வலயத்தில் உள்ள விசேட கல்வி அலகுகளைக் கொண்ட பாடசாலைகள் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டில் இருந்து விசேட கல்வி அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் அவை எந்தளவிற்கு விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் அமைகின்றது என்பது சந்தேகத்திற்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் தொகையான விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுகின்ற போதிலும் அவர்கள் அனைவரும் பாடசாலையில் கல்வி கற்பதற்காக இணைக்கப்படுகின்றனரா என்பது கேள்விக்குரியதாகும்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயலாமை கொண்டவர்களின் எண்ணிக்கையானது அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்கமைய அட்டவணை 1.2 இன்படி மட்டக்களப்பு மாவட்டமானது ஏனைய மாவட்டங்களை விட அதிகமான விசேட தேவையுடையவர்களை உள்ளடக்கிய மாவட்டமாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 1.2 : கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட அடிப்படையிலான விசேட தேவையுடையோரின் எண்ணிக்கை.**

| மாவட்டம் | விபரம் | வகை அடிப்படையிலான விசேட தேவையுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதோர் | பார்வைக் குறைபாடுடையோர் | கைகளை இழந்தோர் | கால்களை இழந்தோர் | மனரீதியாகப் பாதிக்கப்பட்டோர் | முதுகெலும்பு பிரச்சினை நீர்கட்டிகளைக் கொண்டோர | வலிப்புடையோர். | வேறு வகையுடையோர் |
| அம்பாறை | முழுமையாக | 641 | 201 | 278 | 408 | 1019 | 217 | 294 | 1064 |
| | பகுதியாக | 412 | 323 | 287 | 929 | 1317 | 264 | 254 | 874 |
| மட்டக்களப்பு | முழுமையாக | 630 | 404 | 195 | 527 | 1374 | 133 | 226 | 1214 |
| | பகுதியாக | 378 | 353 | 386 | 848 | 939 | 84 | 135 | 381 |
| திருகோணமலை | முழுமையாக | 440 | 354 | 231 | 332 | 828 | 199 | 259 | 220 |
| | பகுதியாக | 220 | 403 | 281 | 508 | 412 | 206 | 71 | 201 |

(மூலம் : கிழக்கு மாகாண புள்ளிவிபரவியல் திணைக்களம், திருகோணமலை - 2024)

### ஆய்வுப் பிரச்சினைக் கூற்று

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்தில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்கள் வளப்பற்றாக்குறை காரணமாக கற்றல் செயற்பாட்டினை முறையாக முன்னெடுப்பதில் சிரமப்படுகின்றனர்.

## 1.3 ஆய்வு நோக்கம்

### பொது நோக்கம்

விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வியை முறையாக முன்னெடுப்பதில் உள்ள சவால்களைக் கண்டறிதல்.

### சிறப்பு நோக்கம்

1. விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளின் பொருத்தப்பாட்டினை கண்டறிதல்.
2. விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக நடைமுறையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை கண்டறிதல்.
3. விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்தல்.
4. விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.

## 2.0 இலக்கிய மீளாய்வு

Abdullah மற்றும் Norazmi Bin Nordin (2024) என்போர் மேற்கொண்ட The Impact Of Facilities Management Among School Leaders On Special Need Students Achievement: A Review எனும் ஆய்வில் பாடசாலை வசதிகள் மற்றும் அணுகல் வசதிகள் மூலம் விசேட தேவைகளுடைய மாணவர்களிடையே கல்வியின் தரம் எளிதாக மேன்மையடைகின்றது எனவும் விசேட தேவைகளுடைய மாணவர்களின் சாதனைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பாடசாலை வசதிகளினால் ஏற்பட்ட விளைவுகளுமாகும் எனக் குறிப்பிடுகின்றனர்.

Arif Fakhrudin Maulana (2023)என்பவர் மேற்கொண்டSystematic Literature Review The Role of Educational Facilities and Infrastructure for Children with Special Needs at Schoolஎனும் ஆய்வில்விசேட தேவைகள் உள்ள குழந்தைகளுக்குத் தரமான வழிகாட்டிகள் தேவை. விசேட தேவைகள் உள்ள குழந்தைகளுக்குத் தேவைப்படும் வழிகாட்டிகளில் ஒன்று, அவர்களின் கல்விக்கு ஆதரவளிக்கக்கூடிய வசதிகளும் உள்கட்டமைப்புகளும் ஆகும். பாடசாலைகளில் சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கான கல்வி வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளின் முக்கியத்துவமாகும் எனவும் குறிப்பிடுகின்றார்.



© 2026, IRJTSR 

Indah Maysela Azzahra (2022)என்பவர் மேற்கொண்ட Learning facilities and infrastructure based on the characteristics of Children with Special Needs in inclusive educationஎனும் ஆய்வில் விசேட தேவைகள் கொண்ட குழந்தைகளின் ஒவ்வொரு பண்புக்கும் வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளில் வெவ்வேறு தேவைகள் உள்ளன என்று ஆய்வின் முடிவுகள் கண்டறிந்துள்ளன. மேலும், அறைகள், உபகரணங்கள், ஊடகங்கள் மற்றும் மாணவர் கற்றல் வளங்கள் போன்ற பல உட்கட்டமைப்பு வசதிகளை,விசேட தேவைகள் கொண்ட மற்ற வெவ்வேறு வகைக் குழந்தைகளின் பண்புகளுக்காக ஒதுக்க முடியும் என்றும் கண்டறியப்பட்டது. அனைவரையும் உள்ளடக்கிய நிறுவனங்கள், சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளின் ஒவ்வொரு பண்பின் அடிப்படையிலும் மாற்றியமைக்கப்பட்ட உள்கட்டமைப்பை வழங்க வேண்டும், அப்போதுதான் அவற்றை அனைவரையும் உள்ளடக்கிய வகையில் பயன்படுத்த முடியும் என்பதே இவ்வாய்வின் முடிவாகும்.

Mokgaestsi(2019)என்பவர் தென்னாபிரிக்காவில் Mokwatedi எனும் பாடசாலையிலுள்ள 258 விசேட தேவையுடைய மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு “விசேட தேவையுடைய மாணவர்களது தாழ் அடைவில் பங்களிப்புச் செய்யும் பாடசாலை சார்ந்த காரணிகள்” எனும் ஆய்வில் பாடசாலையில் காணப்படும் வசதிகள் குறைபாடு, கற்பித்தற் துணைச்சாதனங்களின் குறைபாடு, வகுப்பறைக் கவின்நிலைப்படுத்தப்படாமை என்பன தாழ் அடைவிற்கான காரணங்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளன.

## 3.0 ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியல் என்பது ஒரு ஆய்வின் முழுச் செயல்முறையையும் விவரிக்கும் ஒரு முறை அல்லது செயல்முறையாகும். இது ஆய்வின் கட்டமைப்பு, தத்துவம், ஆய்வு வடிவமைப்பு, தரவு சேகரிப்பு முறைகள், மாதிரி தெரிவு, தரவு பகுப்பாய்வு மற்றும் அறிக்கையை தயாரித்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது (குமார், 2019). ஓர் ஆய்விற்கு அவசியமான தகவல்களைச் சிறந்த வழிகளில் பெற பொருத்தமான நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வகையிலே இவ்வாய்விற்கான தரவுகள்விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களிடத்திலிருந்தும் மற்றும் இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களிடத்திலிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் வினாக்கொத்தின் ஊடாகவும்பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள் மற்றும் விசேட கல்விக்கான ஆலோசகரிடமிருந்து நேர்காணல் மூலமாகவும் பாடசாலை வள நிலைமைகள் குறித்து ஆய்வாளனால் அவதானிப்பு படிவத்தின் மூலம் தரவுகள் பெறப்பட்டதோடு இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளதால் இவ்வாய்வானது ஒரு கலப்பு ஆய்வு அணுகுமுறையில் அமைந்துள்ளது அத்தோடு வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமையப்பெற்றுள்ளதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

### 3.1 மாதிரித் தெரிவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களுள் கல்குடா கல்வி வலயமானது ஆய்வாளனால் ஆய்வுப்பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வானது விசேட கல்வி அலகுகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதனால் கல்குடா கல்வி வலயத்தில் உள்ள விசேட கல்வி அலகுகளை உடைய 5 பாடசாலைகளும் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய கல்குடா கல்வி வலயத்தில் உள்ள மூன்று 1AB பாடசாலைகளும், இரண்டு 1C பாடசாலைகளுமாக விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகள் ஆய்வாளனால் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி அம்மாணவர்களுடன் அதிகம் தொடர்புடைய நபர்களான அவர்களது பெற்றோர்கள் மற்றும் விசேட கல்வி அலகுகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் இடைநிலைபிரிவு ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள்,விசேட கல்விக்கான ஆலோசகர் இவ்வாய்வுக்காக மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி 05 பாடசாலைகளிலும் விசேட கல்வி அலகில் கற்கும் 35 விசேட தேவை கொண்ட மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் நோக்க மாதிரியின் அடிப்படையில் முழுவதுமாக மாதிரியாக ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


விசேட கல்வி அலகுகளில் கற்பிக்கும் ஆறு ஆசிரியர்களும் அப்பாடசாலைகளில் இடைநிலைபிரிவில் கற்பிக்கும் 110 வகுப்பாசிரியர்களும் இவ்வாய்விற்காக தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் பாடசாலையில் உள்ள அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களும் இவ்வாய்விற்காக தெரிவு செய்யப்பட்டனர். ஆய்வின் வரையறை கருதியும் ஆய்வு முடிவுகளை பொதுமைப்படுத்துவதற்கும் அணுகக் கூடியவாறும் மாதிரிகள் ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

## 4.0 தரவுப் பகுப்பாய்வுகள்


### 4.1 விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளின் பொருத்தப்பாட்டினை கண்டறிதல்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கல்வி அமைச்சினால் கொண்டு வரப்படுகின்ற திட்டங்கள் தொடர்பில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் அவை தொடர்பான அறிவினையும் தெளிவினையும்அறிந்து கொள்ளும் விதமாக வினா இலக்கம் 1.1 இல் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சரிவுப்பாதைகள் பாடசாலையில் முறையாக அமைக்கப்பட்டுள்ளது கூற்று இலக்கம் 1.2 மாணவர்களுக்கான பொருத்தமான தளபாடங்கள் காணப்படுகின்றன. கூற்று இலக்கம் 1.3 பாடசாலை முகப்பிற்கும் விசேட தேவை அலகிற்கும் இடையிலான தூரம் பொருத்தமானதாக காணப்படுகின்றது. கூற்று இலக்கம் 1.4 விசேட தேவை ஆலோசனைக் குழு காணப்படுகின்றன. கூற்று இலக்கம் 1.5 பெற்றோர்களுக்கான கூட்டங்கள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றன. கூற்று இலக்கம் 1.6கேட்போர் கூடமும் பாடசாலை முற்றமும் முறையாக அமைக்கப்பட்டுள்ளதா என விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்கள் மற்றும் இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களிடமும், பெற்றோர்களிடமும் வினாக்கொத்து மூலமாக வினவப்பட்ட அளவு ரீதியான வினாவுக்கு வழங்கப்பட்ட பதில்களை உரு 4.1 காட்டுகிறது.




**உரு 4.1 : சரிவுப்பாதைகள் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பான துலங்கல்**


விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சரிவுப்பாதைகள் பாடசாலையில் முறையாக அமைக்கப்பட்டுள்ளது எனும் கூற்று வழங்கப்பட்ட போதுவிசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களில் 46 சதவீதமானோர் எதிர்க்கின்றேன் என்றும் 20 சதவீதமானோர் வலுவாக எதிர்க்கின்றேன் என்றும் 43 சதவீதமானோர் நடுநிலைமை என்றும் பதிலளித்துள்ளனர். ஆசிரியர்களில் 39 சதவீதமானோர் எதிர்க்கின்றேன் என்றும் 54 சதவீதமானோர் வலுவாக எதிர்க்கின்றேன் என்றும் 7 சதவீதமானோர் நடுநிலைமை என்றும் பதிலளித்துள்ளனர். இதற்கமைய விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சரிவுப்பாதைகள் பாடசாலையில் முறையாக அமைக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. ஆய்வாளரின் அவதானத்தின் போது முறையான அணுகல் வசதிகள் மேற்கொள்ளப்படவில்




**உரு 4.2 : மாணவர்களுக்கான பொருத்தமான தளபாடங்கள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பான துலங்கல்**


*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பொருத்தமான தளபாடங்கள் காணப்படுகின்றன எனும் கூற்று வழங்கப்பட்ட போது விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களில் 48 சதவீதமானோர் எதிர்க்கின்றேன் என்றும் 52 சதவீதமானோர் வலுவாக எதிர்க்கின்றேன் என்றும் பதிலளித்துள்ளனர். ஆசிரியர்களில் 43 சதவீதமானோர் எதிர்க்கின்றேன் என்றும் 57 சதவீதமானோர் வலுவாக எதிர்க்கின்றேன் என்றும்பதிலளித்துள்ளனர். இதற்கமைய விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பொருத்தமான தளபாடங்கள் பாடசாலையில் முறையாக அமைக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. ஆய்வாளரின் அவதானத்தின் போது முறையான அணுகல் வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டது.




**உரு 4.3 : பாடசாலை முகப்பிற்கும் விசேட தேவை அலகிற்கும் இடையிலான தூரம் பொருத்தமானதாக காணப்படுகின்றதா என்பது தொடர்பான துலங்கல்**


பாடசாலை முகப்பிற்கும் விசேட தேவை அலகிற்கும் இடையிலான தூரம் பொருத்தமானதாக காணப்படவில்லை என்பது உரு 4.3 மூலம் காட்டப்பட்டுள்ளது இதனை 24 சதவீதமான விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள் எதிர்க்கின்றேன் என்றும் 76 சதவீதமானோர் வலுவாக எதிர்க்கின்றேன் என்றும் பதிலளித்துள்ளதோடு ஆசிரியர்களில் 27 சதவீதமானோர் எதிர்க்கின்றேன் என்றும் 73 சதவீதமானோர் வலுவாக எதிர்க்கின்றேன் என்றும் தமது துலங்கல்களை அளித்துள்ளனர் இது விசேட தேவை அலகிற்கும் பாடசாலை அலகிற்கும் இடையில் நீண்ட தூரம் காணப்படுகின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றது.




**உரு 4.4 : விசேட தேவை ஆலோசனைக் குழு காணப்படுகின்றதா என்பது தொடர்பான துலங்கல்**


உரு 4.4 இன் மூலம் விசேட தேவை ஆலோசனைக் குழு காணப்படுகின்றதா எனும் கூற்றிற்கு ஆசிரியர்கள் மற்றும் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள் நடுநிலைமை எனும் பதிலையே அதிகபடியாக குறிப்பிட்டுள்ளனர். எனவே அத்தகைய குழுக்கள் தொடர்பில் ஆசிரியர்கள்

மற்றும் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள் அறிந்திருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.




**உரு 4.5 : பெற்றோர்களுக்கான கூட்டங்கள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பான துலங்கல்**

பெற்றோர்களுக்கான கூட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை என்பது உரு 4.5 மூலம் காட்டப்பட்டுள்ளது இதனை 100 சதவீதமான விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் எதிர்க்கின்றேன் என்று தமது துலங்கல்களை வழங்கியுள்ளனர். இது பெற்றோர்களுக்கு விசேட கல்வி தொடர்பான முறையான வழிகாட்டல்கள் வழங்கப்படவில்லை என்பதனை வெளிக்காட்டுகின்றது.





**உரு 4.6 : கேட்போர் கூடமும் பாடசாலை முற்றமும் அமைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பான துலங்கல்**

கேட்போர் கூடமும் பாடசாலை முற்றமும் முறையாக அமைக்கப்படவில்லை என்பது உரு 4.6 மூலம் காட்டப்பட்டுள்ளது இதனை 100 சதவீதமான விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் எதிர்க்கின்றேன் என்று தமது துலங்கல்களை வழங்கியுள்ளனர். இது இயலாமையுடையவர்களுக்கான ஒழுங்குவிதிகளில் கூறப்பட்டுள்ள (2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சுற்றுநிருபம்) படி கேட்போர் கூடமும் பாடசாலைகளில் முற்றமும் முறையாக அமைக்கப்படவில்லை என்பதனை வெளிக்காட்டுகின்றது.

மலசலகூடங்கள் முறையாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் வினவப்பட்ட போது பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன் என தமது துலங்கலை வெளிப்படுத்தினர்.

## 4.2 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக நடைமுறையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை கண்டறிதல்.

விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நடைமுறையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை கண்டறிந்து கொள்ளும் பொருட்டு கற்பித்தல் துணைச்சாதனங்களை வழங்குதல்,வகுப்பறைகளை கவின்நிலைப்படுத்துதல், பாடசாலைச் சூழலை அமைத்தல், வளங்களை ஒதுக்கீடு செய்தல் முறையாக நடைபெறுகின்றனவா? எனும் வினாவுக்கு வழங்கப்பட்ட பதில்களை உரு 4.6வெளிக்காட்டுகின்றது.





**உரு 4.6 : விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நடைமுறையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பானவற்றுக்கு வழங்கப்பட்ட துலங்கல்கள்**

தரவுப் பகுப்பாய்வின் அடிப்படையில்79 சதவீதமான ஆசிரியர்களும் 86 சதவீதமான விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களும் கற்பித்தல் துணைச்சாதனங்களை வழங்குதல், வகுப்பறைகளை கவின்நிலைப்படுத்துதல், பாடசாலைச் சூழலை அமைத்தல், வளங்களை ஒதுக்கீடு செய்தல் என்பன முறையாக நடைபெறவில்லை என்பதனையே தமது துலங்கல்களாக வெளிப்படுத்தியுள்ளனர்.

## 4.3 விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்தல்.

விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறியும் முகமாக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் வினவப்பட்ட போதுஉரு 4.7 காட்டப்பட்டுள்ள துலங்கல்கள் பெறப்பட்டன.




**உரு 4.7 : விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்கள்**

இதற்கமைய விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் நிதிசார்ந்தபிரச்சினைகள், வளங்கள் போதுமானவைகளாக இல்லாமை, சமூக பங்களிப்பு குறைவு, விசேட கல்வி தொடர்பான தெளிவின்மை முதலான பதில்கள் கிடைக்கப்பெற்றன. இதனை 80% - 100% மானவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

## 4.4 விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.

விசேட தேவையுடையோருக்காக கல்வி தொடர்பான போட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை குறைப்பதற்கான வழிமுறைகளை முன்மொழியும் பொருட்டு ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட துலங்கல்கள்ளாக

- ✓ விசேட தேவையுடைய மாணவர்களுக்கான உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியை பெற்றுக்கொள்ளல்.
- ✓ விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கொண்டுவரப்பட்டுள்ள கல்விச்சட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- ✓ விசேட கல்வி அலகுகள் முறையாக செயற்படுத்தப்படுகின்றனவா என்பதனை கண்காணிப்பதற்கு முறையான உள்ளக மற்றும் வெளியக குழுக்களை நியமித்தலும் மேற்பார்வைகளை மேற்கொள்ளலும்
- ✓ வளப்பகிர்வை மேற்கொள்ளும் போது விசேட தேவை அலகையும் உள்வாங்கிய வகையில் முறையான வளப்பகிர்வை மேற்கொள்ள வேண்டும்.
- ✓ விசேட கல்வி தொடர்பான நேர்மனப்பாங்கினை ஏற்படுத்துதல்

**நேர்காணல் மூலம் வினவிய வினாக்களுக்காக பகுப்பாய்வு முடிவுகள்.**

விசேட தேவையுடையோருக்காக கல்வி தொடர்பான போட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை குறைப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் குறித்து விசேட கல்விக்கான ஆலோசகரிடம் வினாவிய போது பெற்றோர்களுக்கு விசேட கல்வி தொடர்பில் தெளிவூட்டல், விசேட கல்வி அலகுகளுக்கான முறையான வளப்பகிர்வு,உள்ள மற்றும் வெளியக மேற்பார்வைகளை முறையாக நடைமுறைப்படுத்தல்,விசேட கல்வி அலகிற்கான ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை ஏற்பாடு செய்தல், அதிபர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடனும் சமூக நிறுவனங்களுடனும் தொடர்புகளைப் பேணுதல் முதலானவை விசேட தேவைசார் கல்விசார் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த துணைபுரியும் எனும் துலங்கலை வெளிப்படுத்தினார். இது ஆய்வாளனின் தரவுப்பகுப்பாய்வுடன் ஒத்துப்போவதாக அமைகின்றது.

## 5.0 முடிவுகளும் விதப்புரைகளும்

**முடிவுகள்**

விசேட கல்வி அலகுகளை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் முடிவுகளாக

- ❖ விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சரிவுப்பாதைகள் பாடசாலைகளில் முறையாக அமைக்கப்படவில்லை.
- ❖ மாணவர்களுக்கான பொருத்தமான தளபாடங்கள் காணப்படாமை.
- ❖ பாடசாலை முகப்பிற்கும் விசேட தேவை அலகிற்கும் இடையிலான தூரம் பொருத்தமானதாக காணப்படாமை.
- ❖ கேட்போர் கூடமும் பாடசாலை முற்றமும் முறையாக அமைக்கப்படாமை.
- ❖ பெற்றோர்களுக்கான கூட்டங்கள் முறையாக மேற்கொள்ளப்படாமை.
- ❖ விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அணுகல் வசதிகள் பொருத்தமின்மை.
- ❖ விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கோட்பாடுகள் வெறுமனே கோட்பாடுகளாகவே அமைந்துள்ளமை.
- ❖ விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சமூக ஆதரவு குறைவாக உள்ளமை.
- ❖ விசேட கல்வி தொடர்பான தெளிவின்மை.

முதலான முடிவுகள் இவ்வாய்வின் மூலம் பெறப்பட்டுள்ளன.

**விதப்புரைகள்**

- ❖ வள ஒதுக்கீடுகளில் விசேட கல்வி அலகுள்ள பாடசாலைகளுக்கு உரிய முறையில் வளப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR

- விசேட தேவையுடைய மாணவர்களுக்குப் பொருத்தமான வகையில் பாடசாலையில் சரிவுப் பாதை, குடிநீர் வசதி, மலசலகூடங்கள், நடைபாதைகள், கேட்போர் கூடம் என்பவற்றை அமைத்தல்.
- பாடசாலையின் முகாமையாளரான அதிபர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களினதும் கீர்த்திமிகு நபர்களின் ஊடாகவும் நிதி உதவிகளை பெற்றுக்கொடுத்தல்.
- விசேட கல்வி அலகுகளின் செயற்பாடுகளை வலய மட்டத்தில் முறையாக மேற்பார்வை செய்தலும் அறிக்கைப்படுத்தவும் வேண்டும்.
- சகல ஆசிரியர்களுக்கும் வாண்மைத்துவ பயிற்சிகளில் விசேட தேவையுடைய மாணவர்களை கையாளுவதற்கான பயிற்சிகளை வழங்க வேண்டும்.
- விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கொண்டுவரப்பட்டுள்ள கல்விச்சட்டங்கள் தொடர்பில் விளிப்புணர்வினை ஏற்படுத்துதல் வேண்டும்.
- க.பொ.த உயர்தர மாணவர்களின் செயற்றிட்டங்களை விசேட கல்வி மாணவர்களுக்கான வசதிகளாக பயன்படுத்திக் கொள்ளல்.

### முடிவுரை

கல்வியில் சமவாய்ப்புக்கள் மற்றும் சம சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் நோக்கில் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு பிரயத்தனங்களும் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற போது அதனால் அடைந்து கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்ற நோக்கங்களை அடைந்து கொள்ள முடியும். குறிப்பாக விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கோட்பாட்டு ரீதியில் கொண்டு வரப்படுகின்ற பல்வேறு அம்சங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதனை கண்டறியும் விதமாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன் வாயிலாக விசேட தேவையுடைய மாணவர்களும் கட்டாயக் கல்வியினை நிறைவு செய்வதற்கான நடைமுறைகள் குறித்து இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடா கல்வி வலயத்தில் விசேட கல்வி அலகைக் கொண்ட பாடசாலைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளை வினைதிறனான வகையில் நடைமுறைப்படுத்துவதற்கான வழிவகையினை முன்வைப்பதோடு விசேட கல்வி அலகுகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி கற்பதற்கான உரிமையினை முழுமையடையச் செய்வதும் ஆய்வாளனின் எதிர்பார்ப்பாகும்.

### உசாத்துணைகள்

[1] அருள்மொழி, செ.(2017), கற்பித்தலுக்கான உளவியல், துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு.

[2] தனபாலன், பா.(2019), கல்விப் பிரயோக உளவியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

[3] இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2010). விசேட தேவைகள் சார் கல்விக்கான பல்துறை அணுகுமுறைகள், நாவல, நுகேகொட.

[4] கல்வி அமைச்சு (2024), பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஒழுங்கமைப்பு பற்றிய சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டுதல்கள், இசுருபாய, பத்தரமுல்ல.

[5] கல்வி அமைச்சு (2024), விசேட தேவைகளுடன் கூடிய

[6] மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயல்பாடு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்காக வெளியிடும் விசேட வசதிகள் வழங்கும் சுற்றறிக்கை மற்றும் ஆலோசனை கையேடு, இசுருபாய, பத்தரமுல்ல.

[7] Arif Fakhrudin Maulana (2023), Systematic Literature Review The Role of Educational Facilities and Infrastructure for Children with Special Needs at School, https://ejournal.upi.edu/index.php/jassi/index

[8] Khushaboo and Kavita Dua (2022), Children with Special Needs, https://www.google.com/url?q=https://www.ijnrd.org/papers/IJNRD2207085.pdf&sa=U&ved=2ahUKEwiwpZ2gyeOUAxVHR2wGHVsgBhgQFnoECBcQAg&usg=AOvVaw1HE2MIZpynLpqEeLuTmrns

[9] Mohd Faizul Ismail et al (2021), Provision of Students with Disabilities Facility at Public Universities: A Case Study, http://creativecommons.org/licences/by/4.0/legalcode

[10] Ministry of social welfare.(2003). National policy on disability for Srilanka; Sethsiripaya Battaramulla SriLanka. Retrieved from: http://www.unicef.org/srilanka/disablitypolicy(1).pdf